தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௰	திருவள்ளுவர் யாண்டு ௨௲௭ இராட்சச, பங்குனி (1976 — மார்ச்சு — ஏப்ரல்)	மலர் ௧௨

கவிமணியின் பாடல்களில் இயற்கை

பேராசிரியர் திருமதி. தரணிபாசுகர், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர் பூ. சா. கோ. அர. கிருட்டினம்மாள்
மகளிர் கல்லூரி. கோவை.

இறைவனின் படைப்பான இயற்கை இன்பத்தில் தோயாத மனித உள்ளங்கள் இருக்க முடியாது. கோலமிகு வானம், வானத்து வண்ணவிளக்குகளாம் இரு சுடர்கள், ஓங்கி உயர்ந்த நெடுமலை, மலையினின்று ஆடிவரும் அருவி, பாடிவரும் தென்றல், காற்றசைக்க அசையும் மலர்க்கூட்டங்கள், பல்வகை மரங்கள் பச்சைப்படாம் போர்த்தது போன்ற புல்வெளி என இயற்கை மனிதனுக்குத் தரும் எழில்கோலங்கள் பலவாகும். இயற்கை தரும் அழகில் மனிதனும் தன்னை மறந்து ஈடுபட்டு இன்பம் பெறுகிறான். காலங்கள் மாறினும், மனிதர்கள் மாறினும் அழியாத இயல்புடைய இயற்கை, கணந்தொறும் புதிய புதிய காட்சி காட்டி மனிதனைத் தன்வயப்படுத்தி வருகிறது. "இயற்கை தனக்கமைந்துள்ள பல்வேறு இயல்புகளால் மனிதனை உயர்வுபடுத்தியும், மகிழ்ச்சி துன்பமென்னும் உணர்வு நிலைகளில் ஆழ்த்தியும், அமைதிப்படுத்தியும் பல உத்திகளைப் பயன்படுத்தி ஓயாமல் மனித ஆன்மாவைத் தன் வயப்படுத்த முயல்கிறது 'என இந்நிலையைக் கூறுகிறார்' திரு ஜே சி. ஷார்ப் என்பவர்[1] இத்தகைய பேராற்றலும் பேரழகும் படைத்த இயற்கையைக் கண்ட கவிஞர்கள், அவ்வின்பத்தில் தம்மை யிழந்து பாடியதில் வியப்பில்லை. அவர்கள் இயற்கையை வாழ்த்தியும் வழிபட்டும் மகிழ்ந்தனர் இயற்கையை நீக்கிப் பாடிய புலவர் ஒருவருமிலர் மனித உலகைப் பாடுவதாயினும் அதிலும் இயற்கையை இணைத்தே பாடினர் இயற்கை அழகை வெளிப்படுத்தவும், தம் உணர்வுகள், அனுபவங்கள் இவற்றை உணர்த்

தவும், அரிய உண்மைகளைப் புலப்படுத்தவும், வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு ஒரு பின்னணி அமைக்கவும், இயற்கையைப் புலவர்கள் தம் பாடல்களில் பாடியுள்ளனர். நாமும் இதனுல் காட்சி இன்பமும் கருத்து நலனும் பெறுகின்ருேம்.

இயற்கை தரும் எல்லா அழகுகளையும் நுகர்ந்து களித்தவர் கவிமணி அவர்கள் இயற்கையைப் பல கோணங்களில் கண்டு அதனேடு இணைந்து வாழ முயன்றவர். "வண்டி மாடு அவர்க்கு அற்புதப்பொருள் பறக்கும் குருவியோடு அவரது உள்ளம் பறந்து பறந்து திரிந்திருக்கிறது கறக்கும் பசுவைச் சுற்றி, அதன் கன்று போல அவர் மனம் துள்ளும் நாயும் ஈயும் அவர்க்குத் தோழர்கள். ஊரும் எறும்பும், குள்ள நரியும் அவரது நண்பர்கள். அவரொடு கதை பேசும், புல்லும் அவருக்குப் புராணம் விரிக்கும்"[2] இப்படி இயற்கையொடு உறவாடிய கவிஞர் அவர். பசுவொடு கன்று களிக்கையில் புலி தாவுதல், கலையினம் பொங்கிக் குதிக்கையில் கொல்கடுவாய் வரல் போன்ற முரண்பட்ட காட்சிகளை இயற்கைப் படைப்பில் கண்டு மனம் வருந்தித் திகைத்துள்ளார்.[3] இயற்கை, வாழ்வொடு ஒன்றிக் கலந்திருப்பதை அறிந்து அஃது உணர்த்தும் அறிவுரையை ஏற்றுக்கொண்டு நமக்கும் அளிக்கிருர். இயற்கை இறைவடிவில் இருப்பதையும் உணர்ந்து வழிபடுகிருர். இவ்வாறு கவிமணி அவர்களின் உள்ளமொடு, வாழ்வொடு ஒன்றிய இயற்கையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை - காட்சி இன்பம் :

இயற்கை காண்பவர்க்குக் குழந்தைத்தனமான, கலப்பற்ற சிந்தனையிடையீடில்லா எளிய மகிழ்ச்சியைத் தருகிறது என்பர் திரு ஷார்ப் இத்தகைய எளிய மகிழ்ச்சியைக் கீழ்க்காணும் பாடலில் நாம் பெறுகிருேம்.

"வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்
பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்" — ம மா 284.

மண்ணின் குளிர்ச்சி, பயிரினங்களின் வளர்ச்சி, உயிரினங்களின் வாழ்வு ஆகியவை மழையையொட்டி நடைபெறும் இயற்கைத் தொடர் நிகழ்ச்சிகளாகும்.

ஆண்டின் பிரிவுகளான பருவங்களில் கவிஞரை ஈர்த்த காலம் வசந்தமாகும். இயற்கை தான் இழந்த அழகை மீண்டும் பெறும் காலம் இதுவாகும். வாட்டமெல்லாம் நீங்கும் காலம் வசந்தமாகும்.[4] மண்ணில் கொஞ்ச நாட்களாய் உறங்கும் செடிகளெல்லாம் இக்காலத்தில் கண் மலரும்.[5] வருத்தமென்னும் வாடைக் காலப் போர்வையினை வசந்தமென்னும் நெருப்பில் வீசி எறிந்து விடலாம்.[6]

பட்டு டுத்து வாருங்கள்
  பணிகள் பூண்டு வாருங்கள்
பொட்ட ணிந்து சீக்கிரம்
  புறப்படுங்கள் — ம. மா. 287.
வாசச் செப்பைத் திறவுங்கள்
  வாரி யெங்கும் வீசுங்கள் — ம. மா. 288.
மீண்டும் நன்மை காணலாம்
  விரைந்தெ ழுங்கள் — ம. மா. 289.

என மேகம் இக்காலத்தை வரவேற்கிறது.

வாசமெழு சோலைவாய் மதுவுண்டு — வண்டினம்
  மதுரகீ தங்கள் பாட
மந்தமா ருதம் வீச, வேனிலிங்கின் றெனது
  வாசலில் வந்தது ஐயா — ம. மா 7.

என மகிழ்கிறார் கவிமணி தாகூர் எழுதிய 'சரத்கால விழா' என்னும் கவிதையை யொட்டிச் 'சரத்காலம்' என்ற தலைப்பிலும் இக்காலத்தின் இயற்கைப் பொலிவினைக் காட்டுகிறார்.[7]

இயற்கை ஓரே நாளில் பொழுதிற்கேற்பக் கொள்ளும் கோலத்தை மிக நுட்பமாகக் கூறுகிறார். இயற்கையைக் கொண்டே ஒரு நாளின் சிறுபொழுதுகளை உணரலாம். "சேவற்கோழியும் காகமும் கரைய வானம் செக்கச் சிவந்து தோன்றும் நேரம் - அதிகாலை; செங்கதிர் பொங்கிவர, செந்தாமரை மலரும் நேரம் - காலைப் பொழுது; தலைநேர் சுடர் எழும்போது - பகல் உச்சி; விண்மணி ஆழியில் வீழ வாசம் வீசும் மந்தாரை, முல்லை, ஆம்பல் மெல்ல அவிழ்வது - மாலையில்; அம்புலியும் நட்சத்திரங்களும் தோன்றுவது - இரவில்; பாரி சாதம் கமழ்வது - நள்ளிரவில்" எனப்பொழுதிற்கேற்ப இயற்கை பூணும் கோலத்தை அழகுபடக் கூறுகிறார்.[8]

அன்னுடம் நாம் காணக்கூடிய, காணத்தவறிய காலைக் காட்சிகளையெல்லாம் இவர் பாடல்களில் காணலாம். "விடியற் காலையில் கொக்கொக்கோ எனக் கோழி கூவுகிறது. காகம் 'கா, கா' எனக் கரைகிறது. கிழக்கு வெளுக்கிறது ரோஜா மலர அதனை வண்டு வட்டமிட்டுச் சுற்றுகிறது. கறவைப் பசுவைச் சுற்றிக் கன்று துள்ளி விளையாடுகிறது பசும்புல் நுனியில் முத்துப் போல் பனித்துளிகள் காணப்படுகின்றன [9] நீலவானில் மீன்களெல்லாம் நில்லாதோடி ஒளிகின்றன. [10] இவ்வாருகக் காலைக் காட்சிகளைக் காட்டிய கவிஞர் மாலை அழகிலும் ஈடுபட்டு.

செங்கதிர் வெம்மை தணிந்ததடி — வாசத்
தென்றல் உலாவி எழுந்ததடி
பொங்கி வருஞ்சோணை மாநதியும் — ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலிந்ததடி
முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி — ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி
எல்லை யிலாமலர்ச் சோலையிலே — வண்டும்
இன்னிசைப் பாடித் திரிந்ததடி.
தாயும் இரங்கி வருகுதடி — கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி
ஆயும் பொழிலில் பறவை யெல்லாம் — அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி — [11]

தம் நூலொன்றிற்கு மலரும் மாலையும்' எனப் பெயரிட்டுத் தமக்கு மலர்கள் மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டியுள்ளனர். மண்ணகத்தை விண்ணகமாக்கும் ஆற்றல் மலர்களுக்கு உண்டாம். [12] காலையும் மாலையும் மலரும் இம்மலர்கள் பூமகளின் புன்னகைபோல மலர்கின்றனவாம்; தமிழினைப் போல பரிமளிப்பனவாம். [13] மஞ்சள் குளித்து முகம் மினுக்கி மாயப்பொடி வீசி நிற்கிறதாம் சூரிய காந்தி மலர் [14] இவ்வாறே காகம், [15] கோழி, [16] நாய், [17] கிளி, [18] பசுவும் கன்றும் [19] புலி, [20] குதிரை [21] போன்ற உயிரினங்களும் அவரால் பாடப்பெறும் சிறப்பினைப் பெறுகின்றன

நீர்வளம் குறிப்பிட 'ஆறு' துணையாக வருகிறது கவிஞருக்கு நிலத்தை வளப்படுத்தும் ஆறு, கல்லும் மலையும் குதித்து வந்து சமவெளி எங்கும் இறங்கித் தவழ்ந்து ஏரி குளங்களை நிரப்பிப் புன்செய், நன்செய்ப பயிர்களை வளர்த்துத் தேங்கனிகளையும், வாசமலர்களையும் அள்ளி வந்து அல்லும் பகலுமாக அலைந்து ஆழி இறைவனைக் காண நிற்கவும் நேரமில்லாது விரைந்தோடி வருகிறது [22]

கடலோ எல்லை காணமுடியாததாய்ப் பரந்து விளங்குகிறது. உருண்டு திரண்டு வரும் கடல் உடைந்து திரும்பி ஓடிப் போகிறது. மகர மீன்களையும், முத்தினையும் தன்னகத்தே அடக்கிய பெருமையை உடையது. மழைக்கு மூலமாகவும் விளங்குகிறது.[23] இக்கடலைக் கண்டு நிலவு பொங்குகிறது. இதைக் கண்ட புலவர் மனமும் பொங்குகிறது. பல கற்பனைக் காட்சிகளும் எழுகின்றன.[24] முல்லை மலர்ப் பந்தல் இட்டது போல, முத்து விதானம் அமைத்தது போல அமைந்த வானக் கடலிலே வெள்ளி ஓடமாக மிதந்து செல்லும் நிலவைப் பார்த்து,

பாலாழ் மீது படர்ந்த வெண்ணெய் — ஒரு
பந்தா யுருண்டு திரண்டதுவோ ?
மேலா யுலகில் ஒளி செயவே — ஈசன்
விண்ணக மிட்ட விளக்கிதுவோ — ம. மா. 312

என வியந்து பாடுகிறார்.

'பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே—உன்றன்
பக்கம் வந்து சேருவேனே வெண்ணிலாவே
— ம. மா. 330.

எனத் துடிப்பதைப் பார்க்கலாம்.

இயற்கையைப் பாடுகையில் கவிஞர் சில இடங்களில் சிலவற்றை முன்னிலைப் படுத்தித் தாம் அவற்றிடம் பேசுவது போலவும் (கோழி, கிளி, கடல், வெண்ணிலா), சில தாமே பேசுவன போலவும் (ஆறு, குதிரை, புல், கிளி) அமைத்துப் பாடியுள்ளார்,

நாட்டு நகர வளங்களைக் கூறுகையில், புலவர்கள் தம் பாடல்களில் இயற்கையைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. தாம் பாடும் ஊர்களின், நீர், நிலவளம் குறித்தும் எழில் பற்றியும் பாடுவர் கவிமணியும் தேரூர்,[25] சுசீந்திரம்,[26] இந்தியா,[27] நாஞ்சில்[28] வளம் கூறுகையில் வர்ணனைப் பகுதியாக இயற்கையைப் பயன்படுத்தியுள்ளார்

அணிநலமும் இயற்கையும்

உவமை, உருவகம் போன்ற அணிகளில் இயற்கையைப் பொதுவாகப் புலவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்வர்[29] முகத்தை நிலவிற்கும், வாயினைக் குமுத மலர்க்கும். விழிகளை

நீலமலர்க்கும், கூந்தலை மேகத்திற்கும், பற்களை மாதுளைக்கும் ஒப்பிட்டுக் கூறும் எளிய உவமைகளை இவர் பாடல்களில் பார்க்கலாம்.

திங்கள் முகம் — தே. வி. கீ பக். 73
மதி முகம் — ஆ. சோ. பக் 28
மதியினைப் போல் நிலவெறிக்கும் முகம்
— ஆ சோ, பக். 81
நீலமலர் போலும் விழிகள் — ம. மா 448.
குமுத வாய் — ம. மா. 5
பவழ வாய் — ம. மா. 252
தொண்டையங் கனிவாய் — ம. மா. 36
தரள நகை — தே. வி. கீ. பக். 73
வெள்ளை நுரைபோலும் சிரிப்பு — ம. மா. 376
கமலம் போன்ற இதயம் — ம மா. 577
கொண்டலைக் கண்டனைய கூந்தல் — ம. மா. 36
மாதுளை வித்து இலங்கு பல்லுக்கு இணையாம்
— ம. மா. 158
மாமயில் போலும் நடை — ஆ சோ. பக். 77
மலரடி, மலர்ப்பதம் — தே. வி. கீ. பக். 3, 11
பிடி யொத்த நடை — ம. மா 36

சிறிது மாறுபட்ட நிலையில்.

திங்களைப் பழிக்கும் திருமுகம் — ஆ. சோ. பக். 32
தேனைப் பழித்த சொல்லாய் — ம மா. 277
மானைப் பழித்த விழியுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள் — ஆ, சோ பக். 77
மீன் வண்டை மானை அவள்
விழிகள் மறக்கச் செய்திடுமே — ம. மா 158
கானில் படரும் கோவையும் அக்
கனிவாய் இதழைக் காட்டிடும் — ம. மா. 158
தளிரும் தழையச் செய்யும் கரம் — ம. மா. 451
மலர்ந்து விரியா வாழைக் குருத்தினும்
தண்ணிய கரங்கள் — ஆ. சோ. பக், 21

என வருவதையும் காணலாம்

கோழியின் கால்விரல் கத்திபோலவும், கிளியின் வாய் கத்தரி போலவும் அமைந்துள்ளன. [50] பாலுக்குச் சீனியைப் போல பாடலுக்கு இசையைப் போல சோலைக்குப் பசுங் கிளிகள்

தேவைப்படுகின்றன. [31] புன்னை மலரும் குவளையும் கலந்தது போலப் புலியின் உடம்பு மின்னுகிறது. [32] வானத்தில் முல்லை மலர்ப்பந்தல் இட்டது போலவும், முத்து விதானம் அமைத்தது போலவும் விண்மீன்கள் பொலிகின்றன [33] பால்போல் நிலா காய்கிறது. [34] வானக் கடலிலே வெள்ளி ஓடம் போல, வெண்ணெய் ஒரு பந்தாய்த் திரண்டது போல செம்பொன் குடம் போல நிலவு செல்கிறது. [35] பனித்துளி முத்துப் போல மின்னுகிறது [36]

குழந்தையைக் கவிஞர் கட்டிக் கரும்பாக, வண்ணக்கிளியாக, வாசக்கொழுந்தாக தேனாகப் — பாலாக — மானாக — மயிலாகக் — கனியாக — இளமதியாகப் — பூங்குயிலாகப் பலபட ஒப்பிட்டு மகிழ்கிறார்.

முல்லை நறுமலரோ முறுக்கவிழ் தாமரையோ
மல்லிகைப்பூவோ மருக்கொழுந்தோ செண்பகமோ - ம. மா. 207
உள்ளங் குளிர உரையாடும் பைங்கிளியோ — ம. மா. 208
சொற்கொண்டு எமக்குச் சுகமளிக்கும் பூங்குயிலோ - ம. மா. 209
புன்சிரிப்பைக் காட்டி எமைப் போற்றும் இளமதியோ
ம மா. 210

வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கும் இயற்கை உவமையாவதைக் காணலாம். குழந்தையின் பிறப்பால் தாயின் மனத்தில் பெருகும் மகிழ்ச்சி, கதிரவன் தோன்ற சோலை பொன்னிறம் பெற்று ஒளிர்வது போலாகும். [37] குழந்தையின் இழப்பால் தாயின் நிலை கன்றிழந்த காராம்பசுவாகிறது [38] சில போது தாயும் முத்தினை ஈன்ற சிப்பி மறைவது போல மறையலாம். [39] வாசமலர், மலர்ச்செண்டு வாடுவது போல ஒரு மகன் இறப்பதும், குலைக்காய் உதிர்வது போலப் பல மக்கள் இறப்பதும் இயற்கையில் ஏற்படும் கொடுமைகள். [40] மலர்களைப் போன்ற மகளிர்க்கு [41] வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் பல. அவளை மான் போல நடுங்கச் செய்யும் சூழ்நிலைகள் பல. [42] புலியால் சூழப்பட்ட புல்வாய் போலவும், [43] வலையில் அகப்பட்ட மணிப்புரு போலவும், கொழுகொம்பற்ற கொடி போலவும் அவள் மாமியார் ஆட்சியில் துன்புறுகிறாள். [44] மாமியார் யானையைப் பூனை போலவும், பூனையை யானை போலவும் காட்ட வல்லவள். [45] உடனிருந்து உயிர் கொல்லும் வியாதி போல அமையும் மதனி [46] மலைப் பாம்பு போல அசையாமல் படுத்திருப்பதுமுண்டு. [47] அவன் மகனோ முருக்குத்தடிபோல வளர்ந்திருப்பான். [48]

வாழ்க்கையில் பணத்தைத் தேனீக்கள் போலச் சேர்க்க வேண்டியுள்ளது.[49] ஈட்டிய செல்வத்தைப் பாழுக்கிறைத்த நீர் போல வாரிச் செலவழித்தால் அஃது ஆற்றுப் பெருக்கை யொத்து அழிந்துவிடுகிறது.[50] குடும்பச் சண்டையில் வழக்குத் தொடுத்து சிலர் பாம்பின் வாயில் தேரைக் குதித்துச் சென்று விழுவது போல வழக்கறிஞர்களிடம் மாட்டிக் கொள்கின்றனர்.[51] அப்போது குமாஸ்தாக்கள் ஈக்கள் போலச் சுற்றியும்,[52] புலிபோல் பாய்ந்தும் பணத்தைப் பிடுங்கி விடுகின்றனர்[53] மக்களும் வீணாய்க் கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுக் காலம் கழிக்கின்றனர்.[54] பொருளாதார வாழ்க்கையில் மிகவும் பின் தங்கிய பிச்சைக்காரர்களைப் பற்றிக் கூறுகையில் கவிஞர், அவல வாழ்வினையும் அணி நலத்தால் அழகுபடுத்திக் காட்டுகிறார். அவர்களுக்கு 'ஆலமரமே ஆயிரங்கால் மண்டபம். அதில் தங்கும் பறவைகளே பாடகர்கள் பொடி மணலே பஞ்சணை. மஞ்சள். சிவப்பு நிற ஆடைகளணிந்து பஞ்ச வர்ணக் கிளிகளைப் போல் அவர்கள் திரிவார்கள்"[55] என்கிறார்.

வாழ்க்கையினை வாழ்வாங்கு அமைத்துக்கொள்ளவில்லையெனின் அவ்வாழ்க்கை சண்டிக்குதிரைமேல் நொண்டித்துரை சவாரி செய்வது போலாகும்.[56] வாழ்வின் நிலையாமையை

"வரு தண்ணீரைப் போல வந்தேன்
மாயக் காற்றைப் போல மறைந்தேன்." — பாடல் 22

எனப் புலப்படுத்தியுள்ளார்

கடவுளரைப் பாடுகையிலும், ஆடிக்களிக்கும் மயிலாகக் கலைமகளையும்.[57] ஞான ஒளி வீசும் மதியாகக் கண்ணனையும்[58], காண்கிறார். சிங்க ஏறு. ஞாயிறு என ஏசுபிரானைக்[59] கூறும் கவிஞர் புத்தரை,

'நன்மை விளக்கும் ஞாயிறு நீ
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட் கப்பால்
ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்
— ஆ. சோ. பக் 19

எனப் பாராட்டுகிறார்.

கருணைக்கடல், பிறவிக்கடல், புவனவலை, (தே வி. கீ. 9 13, 53) அடிமலர் (ஆ. சோ. பக். 19), ஞானஒளி, திருவாசகத்தேன் (ம. மா. 10, 130), காலைச் சிறுவன், கங்குல்பானை. காலச் சக்கரம், வாழ்வுப் பறவை (உமார் — 1, 82, 9) என்பன அழகான சில உருவகத் தொடர்களாம்.

வாழ்வும் இயற்கையும்

இயற்கை வெறும் காட்சிப் பொருளாக மட்டுமன்றி, மனித வாழ்வொடு பிணைப்புண்டதாயும் விளங்குகிறது. " இரக்கம் தோழமை எல்லையற்றதோர் ஆன்மீக உணர்வு இவற்றை இயற்கையில் மனிதன் பெறமுடிகிறது. [60] புலவனது உள்ளத் திற்கேற்ப இயற்கை அவனுக்கு உதவுகிறது. மண்ணும், விண் ணும், மலையும் காடும், நிலமும் நீரும், காற்றும் நெருப்பும் இல்லையெனில் வாழ்வேது ? உடலும் உள்ளமும் வளர இயற்கை தேவை, காலை மாலை உலாவி, நிதம் காற்று வாங்கிவரின் காலன் நம் காலைத் தொட்டுக் கும்பிட்டு ஓடிவிடுவானும். [61] குழந் தைகளுக்குத் தும்பியும், பசுங்கிளியும். வண்ணாத்திப்பூச்சியும். குயிலும் மயிலும் (ம மா 460, 464, 468), அன்னப்பறவையும் புள்ளிமான் கன்றும் (ஆ சோ. பக் 81 - 82) விளையாட்டுத் தோழர்களாவர். எலியும், காகமும், பறவையும் மலையும் அணி லும் அவர்கள் கற்பனையில் வரக்கூடிய கதைத் தலைவர்களாவர். (ம மா. 270, 415—419 ; 420—423 ; 424—436 . 493—496 ; 617)

காகமும் கோழியும் கதிரவனும் மலர்களும் பொழுதை உணர்த்துகின்றன. (ம. மா. 230. 236, 245). நாய் வீட்டைக் காக்கிறது. (ம மா. 249), பசு பால் தந்து தாயாகவும், மருத்துவச்சியாகவும் விளங்குகிறது. (ம, மா 263). மங்கை யர்க்கும் ஆடவர்க்கும் மணம் முடித்து வைக்கின்றன மலர்கள். புல் பசுவிற்கு உணவாகிறது. பூண்டு மருந்திற்காகிறது. கல் திருக்கோயில் கட்டுதற்காகிறது. (ம. மா. 337, 22) பொழுது போக்கிற்கென மக்கள் மான்போல், வன்கரடிபோல வேடமிட்டு ஆடினர் வாத்து, வெல்லும் தகர் இவற்றை மோதவிட்டு வேடிக்கை பார்த்துக் களித்தனர் கானப் புலியைப் பழக்கி நகர வீதிகளில் விளையாட்டுக் காட்டினர் (ஆ. சோ. பக். 17) பசுவும் கன்றும் நிலமும் தானப் பொருள்களாகக் கருதப்பட் டன. (ம வ மா. — பக் 69) மரம் வைப்பவரும், குளம் வைப்பவரும் மேற்கதி அடைவர் என்ற நம்பிக்கை இருந்தது (ஆ சோ. பக் 73), குஞ்சையிழந்த குயில் கூவி அழல், கொம்படர்ந்த மாவின் குலையடர்ந்த பூம்பிஞ்சு வெம்பி விழல். கழுத்தில் கயிறு இறுக்கிக் கன்று விழல். போன்றவை கனவில் தோன்றினல் தீய சகுனங்களாகக் கருதப்பட்டன (ஆ சோ பக் 182) தேவர் அரவு வடிவில் வருவர் என்ற நம்பிக்கையும் இருந்தது. (ஆ சோ பக். 26). இவ்வாறு மனிதர் வாழ் விலும், எண்ணத்திலும், நம்பிக்கையிலும் பலபட இயற்கை பின்னி விளங்குவதைக் கவிமணி காட்டியுள்ளார்.

மனிதர் வாழ்வொடு ஒன்றி நிற்கும் இயற்கை மனிதர்க்கு உணர்த்தும் உண்மைகள் பலவாகும். இயற்கையின் ஆற்றல் முன்னர் மனித ஆற்றல் குன்றிப் போதல் போல, அதன் பெருமிதப் பண்புகளும் மனிதனைப் பலபோது தலைகுனியச் செய்கின்றன. மனிதனது சிறுமையைப் புலப்படுத்தும் வகையிலும் இயற்கை விளங்குகிறது.[62] அழியாமல் நிலைத்து நிற்கும் இயற்கை, அழிக்கமுடியாத உண்மைகளை மக்களுக்கு உணர்த்துகிறது. புல்லியதென நினைக்கும் புல், தன்னிடம் பொறுமை, முயற்சி, பழிவாங்காப் பெருந்தன்மை இருப்பதாகப் பெருமையுடன் பேசுகிறது. மனிதர் பல கொடுமைகள் தனக்குச் செய்யினும், புல் அவர்களுக்குத் தீங்கு செய்வதில்லை.

(ம. மா. 616)

“புல்லே யாயினும் புல்லிய குணமிலை
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்
முயற்சி கைவிடேன் முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்கும்”

என ஆறறிவுயிர்க்கு ஓரறி உயிர் உபதேசிக்கிறது. வளப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஓடிவரும் ஆறு, (ம. மா. 290 — 297)

“நில்லும் எனக்கினி நேரமில்லை — இன்னும்
நீண்ட வழி போகவேண்டும்”

என உழைப்பின் பெருமையை உணர்த்தி ஓடியே போகிறது. பாரில் எவரும் விரும்புவது இன்னுயிர் என்பதை எறும்பு (ஆ. சோ. பக். 59) உணர்த்துகிறது

“பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா — ம மா. 261

எனச் சுதந்திர வாழ்வின் சிறப்பினைக் கூறுகிறது கிளி. ‘வம்புகள் பேசும் வாயை அல்லவா பூட்டி வைக்க வேண்டும் எங்கள் வாயைப் பூட்டுவானேன்? ஏழைக்கிரங்கெனும் நீதிமொழியை ஏன் மறந்தீர் என வாதாடிக் குதிரை நியாயம் கேட்கிறது. ஆசைப்பேயால் மனிதர் அன்பைக் கொல்வதைப் பார்த்துக் காட்டு விலங்குகள் நகைக்கின்றனவாம்.

காட்டில் ஓநாயும் நரியும் கடுவாயும் புலியும்
நாட்டு நாகரீகம் கண்டு நகைக்க லாச்சுதையோ
— (ம, மா. 405)

இன்னார், இனியர் எனப் பாகுபடுத்திப் பார்க்கும் பார்வை மனிதனிடம் இருப்பது போல இயற்கையிடம் இல்லை என்பதை நிலவு சுட்டுகிறது. (ம மா. 305)

மனித வாழ்வில் காணப்படும் பல குறைபாடுகள் பறவையின் வாழ்வில் இல்லை. (ம, மா 527 — 548) பொதுவுடமைக் கருத்துக்களை இந்தப் பறவைகள் போதிக்கின்றன.

தேரும் பொதுவுடைமை ருஷிய
தேசத்தி லுள்ள தெல்லாம்
பாரில் பறவைகளைக் கண்டு
படித்த பாடமே யாம் (ம. மா. 547).

கரும்பில் வேம்பின் கனி கனிவதில்லை. வேம்பிலும் கரும்பு விளைவதில்லை. எனவே நன்மையை விதைத்தால் நன்மையினையும், தீமையை விதைத்தால் தீமையினையும் அறுவடை செய்வோம்.
(ம. மா. 553, 554).

சான்றோர்கள் இயற்கைச் சூழலில் வாழ விரும்பினர். அசோகமரம் மலர்ந்து. வணங்கி வளைந்து தழை வீடமைக்க, பன்மலர்ப் பஞ்சணையாக, பக்கத்திருந்த பாறை பிளந்து மஞ்சன நீர்ப்பெருக்கி அருவியாய் ஒழுக, புத்தர் அசோக மர நிழலில் பிறந்ததாகக் கூறுகிறார் கவிமணி (ஆ, சோ. பக் 13) பாழிடமான பாலையை வாழிடமாகக் கொண்டார் புத்தர், (ஆ. சோ. பக். 39) சோலையில் திரியும் பறவையாக வாழும் விருப்பம் கவிமணிக்கும் உண்டு

இயற்கையைக் கூர்ந்து நோக்கினால் அது ஆழ்ந்த பொருளைக் கருத்தை நமக்கு உணர்த்துவதாக இருக்கும். மனிதனுக்குக் கவிஞன் இயற்கை உணத்தும் உண்மைகளைக் காட்டுகிறான். “இருளை அகற்றி இரவி தோன்றுகிறான் — தாமரைப்பூ மலர்கிறது பூவின் மணம் நுகர்ந்து சுவைமிகு தேன் உண்ண வண்டு நினைக்கிறது. அந்நிலையில் மதவேழமொன்று தாழ்கயத்தில் இறங்கிப் பூக்களைப் பறித்து வீசி எறிந்து வெறிகொள்கிறது” 63 இக்காட்சியில் வண்டிற்கு எதிர்பாராத ஏமாற்றம் ஏற்படுகிறது இந்நிலை மனிதர்க்கும் வாழ்வில் ஏற்படக்கூடும் என்பதையும் இக்காட்சி குறிப்பாக உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். “புலர்ந்து விடியும் பொழுதில் சோலையில் மணம் வீசி மலரும் மலர்கள் ஆயிரம்; அதே நேரத்தில் வாடிச் சேற்றினிலே உதிரும் மலர்களும் ஆயிரம்” 64 என்கிறார். உலக வாழ்வின் இயல்பினை இக்காட்சியால் கண்டு தெளியுமாறு கவிமணி உமார்கய்யாம் வழி உணர்த்துகிறார்.

இறை உணர்வும் இயற்கையும்

இறைவனுக்கும் அண்டங்களுக்கும் இடையேயுள்ள பிணைப் பினைப் புலப்படுத்தி உறவாடச் செய்வது இயற்கை என்று கூறுவர் இயற்கையில் இறைவனின் அருட்கோலங்களையே காண்கிறார் கவிஞர், இறைவன் கருணையைத் திங்களிலும், வெகுளியைத் தீயிலும் பெருமையைக் கங்கையிலும், ஆண் மையை நஞ்சிலும். தேவியின் நடையைச் சிறை அன்னமிடமும் காண்கின்றார். (ம மா. 17). பொன்னைச் சொரிந்து பூத் தெழும் கொன்றையினைச் சடைமுடி அண்ணலெனக் கொண்டு தொழுது நிற்கிறார் மலரினை வண்டு சுழன்று வரல், தொண் டர் திருமறை ஓதி வலம் வருவது போலுள்ளது. "மன்னும் இயற்கையில் ஈசனைக் கண்டு வணங்கும் மதியுடையோர் பொன் னம்பலம், வெள்ளியம்பலம் தேடி அலைகுவரோ" எனக் கேட் கிறார் கவிமணி (தே வி கீ பக். 17)

பூவாய், பூவின் மணமாய், வண்ணமாய்ப் பொலிந்து நிற்கிறாள் தேவி அழகம்மை. குளிரான திங்களொடு. தென்ற லாய்க் கோடையைத் தீர்ப்பவளும் அவளே. (ம மா. 27, 35)

மாலைப்பொழுதில் வானவெளியில் தோன்றும் பிறையில் சிவன் திருக்கோலத்தையும், ஆழியில் அலைமோதுகையில் எழும் கதிரொளியில் உமை திருக்காட்சியினையும், கதிரொளிபட மல ரும் தாமரையில் அரியென்ற போதத்தையும், மாமலைச் சாரலில் காணப்படும் வாரணக் கூட்டத்தில் கணேசரையும், மேட்டு நிலங் களில் தினைக் கதிர் உண்ணவரும் மயிலைக் காண்கையில் வேல னையும் கண்டு தொழுகிறார். (ம மா. 476 — 480). செந்நெல் கழனி செல்வத் திருவாழ் அரங்கமாகக் காட்சியளிக்கிறது கவிமணிக்கு (தே வி கீ 71)

மலர்கள் இறைவனுக்கு அர்ப்பணமாவதற்கு மலர்கின்றன. ஈசன் பாத பூசைக்கு எழுந்திருங்கள் என மேகம் கூற (ம. மா. 288)

ஈசன் அடியில் பணிந்திருப்போம் — அவர்
ஏந்து முடிமீதும் ஏறி நிற்போம்

என மலர்களும் மகிழ்ந்து மலர்கின்றன. (ம மா 343)

இறைவனை அடைய மனிதர்க்கு உண்மை அன்பு வேண்டும். அன்பு நீரைப் பாய்ச்சி ஞானப் பயிரை வளர்த்துக் கொள்ள வேண்டும். (ம. மா 566) என்கிறார் கவிஞர்,

கவிமணி காட்டிய இயற்கை அழகில் தோய்ந்து, இயற்கை உணர்த்தும் உண்மைகளை ஏற்று, இயற்கையில் இறைவன் திருக்கோலமும் கண்டு தொழுது நாமும் உய்வோமாக.

அடிக் குறிப்புகள்

1 Poetic interpretation of Nature - P-2 (1889)
2 மலரும் மாலையும் — 45 — 49 (1964)
3 ,, ,, — 481 — 482
4 ,, ,, — 289
5 ,, ,, — 286
6 உமார் கய்யாம் — 9 (1955)
7 மலரும் மாலையும் — 375
8 ,, ,, — 379 — 385
9 ,, ,, — 230 — 233 ; 236 — 239 ; 245
10 உமார் கய்யாம் — 1
11 ஆ. சோதி — பக்கம் 53
12 மலரும் மாலையும் — 336
13 ,, ,, — 335
14 ,, ,, — 351
15 ,, ,, — 240
16 ,, ,, — 241, 243 — 248
17 ,, ,, — 249 — 250
18 ,, ,, — 251 — 261, 353 — 374
19 ,, ,, — 262 — 263 ; 265 — 268
20 ,, ,, — 271 — 276
21 ,, ,, — 501 — 520
22 ,, ,, — 290 — 297
23 ,, ,, — 298 — 303
24 ,, ,, — 304 — 334
25 ,, ,, — 28, 29, 30 — 36
26 ,, ,, — 405
27 ,, ,, — 983 — 985
28 ,, ,, — 1093. 1097 — 1100
29 An introduction to the study of literature - Hudson P - 323 (1965)
30 மலரும் மாலையும் — 244, 359
31 ,, ,, — 373

32 ,, ,, — 276
33 ,, ,, — 305
34 ,, ,, — 331
35 ,, ,, — 304, 312, 310
36 ,, ,, — 237
37 ஆ சோதி — பக்கம் 11
38 ,, — பக்கம் 83
39 ,, — பக்கம் 20
40 ம. மாலேயும் — 467, ஆ சோதி — 80, ம. மாலேயும் — 172
41 ஆசிய சோதி — பக்கம் 28
42 ,, ,, — பக்கம் 31
43 மலரும் மாலேயும் — 172 — மரு. வழி மான் — பக்கம் 39 (1965)
44 மரு வழி. மான் — பக்கம் 39
45 ,, ,, — பக்கம் 47
46 ,, ,, — பக்கம் 117
47 ,, ,, — பக்கம் 118
48 ,, ,, — பக்கம் 117
49 ,, ,, — பக்கம் 64
50 ,, ,, — பக்கம் 72 — மலரும் மாலேயும் — 29
51 ,, ,, — பக்கம் 89
52 ,, ,, — பக்கம் 100
53 ,, ,, — பக்கம் 103
54 மலரும் மாலேயும் — 157
55 ,, ,, — 801, 803, 809
56 ,, ,, — 781, 806
57 ,, ,, — 1
58 ,, ,, — 5
59 ,, ,, — 177, 181
60 An introduction to the study of Literature - Hudson - P 329
61 மலரும் மாலேயும் — 690
62 An introduction to the study of Literature - Hudson - P 327
63 மலரும் மாலேயும் — 614
64 உமார் கய்யாம் — 18.

ஆட்டன் அத்தி - ஓராய்வு

பேராசிரியர். கோ தெய்வநாயகம், எம். ஏ., பி.எசி; டிப்-இன்-அக்ரி.

சோணாட்டினைச் சங்ககாலக் கரிகாலன் ஆண்டு வந்த காலமது நீராட்டு விழவினை எடுப்பிக்கு முகத்தான் பூம்புகார் நகரம் அணிகொண்டு ஆரவாரித்து நிற்கின்றது முறையாக அரசன் கரிகாலன் நீராட்டத்தைக் காண்டல் வேண்டி தன் குடும்பத்தினரும் சுற்றமுஞ் சூழ மருவூர்ப்பாக்கத்துக் காவிரித் துறையாம் கழாஅர்த் துறையினை அடைகின்ருன். ஆடவர் பலரும் காவிரி நீரில் தத்தியும், குதித்தும், மூழ்கியும், நீந்தியும் நீராடி மகிழ்ந்து, மகிழ்விக்கின்றனர் மக்களை. அவர்களில் மிகச் சிறப்பான முறையில் நீராடி அரசனின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டிருந்த ஒருவன் திடீரென காவிரியின் கொடிய சுழலொன்றில் சிக்கி, செயலற்ற நிலையில் கடலை நோக்கித் தள்ளப் பெறுகின்ருன், அவன்பால் காதல் கொண்டிருந்த பெண்ணொருத்தி அவனைத்தேடி காவிரிக் கரையின் வழியே கடலை நோக்கி அலமந்த நிலையிற் சென்று கடலை நோக்கி அழுதரற்றும் போழ்து, பெருங்கடலலைகளால் கரையில் மயக்க நிலையில் சேர்ப்பிக்கப் பெற்றவவ்வாடவனை மருதி என்ற பரதவப்பெண் காப்பாற்றி, அழுதரற்றிய பெண்ணிடத்தே சேர்ப்பிக்கின்ருள்.

நமது சங்க இலக்கியங்களில் ஒன்ருகிய அகநானூற்று 45, 76, 135, 222, 236, 376, 396 ஆகிய பாடல்கள் காட்டுகின்ற ஒரு வரலாற்று நிகழ்ச்சிதானிது. இந்நிகழ்ச்சியில் காவிரிச்சுழலில் சிக்கியவனைத்தேடி ஓடியவள் 'ஆதிமந்தி' என்ற பெண்ணுகும், இவள் இயற்றியதாகக் குறுந்தொகை 31 வது பாடல் காணப்படுகின்றது. எனவே அப்பாடல் பாடிய பெண் புலமை நலமும் வாய்ந்தவளாக்க் கருதப்படுகின்ருள். ஆதிமந்தியால் தேடப்பட்ட ஆடவன் யார்? என்பதுதான் இக்கட்டுரை விளக்கும் செய்தியாம்.

அத்தியும் - மத்தியும்

'ஆட்டனத்தி நலனயந்துரை இ'

(அகம் 222)

'புனல் நயந்தாடுமத்தி'

(அகம் 376)

என்ற தொடர்களில் காணப்படும் எழுத்துப் புணர்ச்சியில்

ஆட்டன் + அத்தி —> ஆட்டனத்தி எனவும்

ஆடும் + அத்தி —> ஆடுமத்தி எனவும்

"புள்ளியீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே"

(தொல். எழு. புண. 138)

என்ற நூற்பாவிற்கேற்ப புணர்ச்சி காணப்படுகின்றது எனவே இவ்விரு தொடர்களிலும் காணப்படுவது ஒரு பெயர் தான் என்பது தெளிவு அப்பெயர் அத்தி என்பது தான் அத்தி என்ற பெயர் தான் புணர்ச்சியில், நிலைமொழியின் ஈற்றுக்கேற்ப

பல்வேல் + அத்தி —> பல்வேலத்தி

எனவும் திரிந்து வருகின்றது.

எனவே ஆடுமத்தி என்பது போன்றே பல்வேலத்தி (அகம் 6, 226) வாயிலத்தி (அகம் 211) என்ற தொடர்களில் காணப்படும் 'லத்தி' என்ற பெயரும் அத்தி என்ற பெயரின் திரிபாகத்தான் இருத்தல் வேண்டும். அத்தி என்ற பெயரை மத்தி என்ற புணர்ச்சி நிலையிற் கண்ட ஏடு பெயர்த்தெழுதினோர் ஆங்காங்கே மத்தி என்றே அத்தி எனும் பெயரைப் பிறழ வெழுதினோர் போலும். இன்றேல் வழக்கு மிகுதி நோக்கி 'மத்தி' என்ற பெயரே அத்தி எனவும் பிறழக் கூறப்பட்டிருக்கலாம்.

ஆட்டன் - ஒரு விளக்கம்

அத்தியின் பெயருக்கு முன் சிறப்புப் பெயராக 'ஆட்டன்' என்ற சொல் காணப்படுகின்றது இவ்வாட்டன் என்ற சொல் எப்பொருளில் வந்தது?

இதுகாறும் நமது சான்றோர்கள், இவனைச் சேரநாட்டினைச் சார்ந்தவனாகவும், கூத்தாடுதலிற் சிறந்தும் தேர்ச்சியும் பெற்றிருந்ததுடன் சேரர்களுக்கே யுரிய ஆட்டத்தினை ஆடுவதில் தனித்திறமை வாய்ந்தவனாகவும் விளங்கியதால் தான் 'ஆட்டன் அத்தி' என்றழைக்கப்பட்டான் என்றும் தம் கருத்தைக் கூறி வந்தனர்

ஆனால் அவர்கள் கூறிய இவனது கூத்து பற்றிய செய்திகள் ஒன்று கூட நமக்குத் தெளிவாக சங்க இலக்கியங்களில் கிடைத்திலது.

இவனைப் பற்றிய சிறப்பு நிகழ்ச்சியாக அகம் நமக்குணர்த்துவதெல்லாம் நீராட்டு பற்றியதுதான். இவனுடைய திறமையெல்லாம் நீராடுதலில்தான் மன்னனுங்கூட மகிழத்தக்க வகையில் வெளிப்பட்டது இதனை

'மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலி கதிர்க் கழனி, கழாஅர் முன்றுறை
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை'

எனும் வரிகளால் கழார்த்துறையில் மன்னன் முன்னிலையில் நிகழ்ந்த நீராட்டு விழா கூறப்பட்டது. 'தண் பதம்' என்பதற்கு 'புதுப்புனல்' என்ற முறையில் பொருள் கூறப்படுகின்றது.

'ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள
கருங் கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்ப
புனல் நயந்தாடு மத்தி யணி நயந்து
காவிரி கொண்டு'

(அகம் - 376)

என்ற பாடல் "அவன் அழகிய கழலானது ஒலிக்க புனலினை நயந்து நீர் விளையாட்டினை நிகழ்த்தினன். அவ்வாறு அவன் பல்வேறுபட்ட நிலையில் நீர்விளையாட்டினை நிகழ்த்தியபோது அவன் இடுப்பில் கட்டியிருந்த இருப்பு வள்ளிலுள்ள மணிகள் எல்லாம் ஒலித்தன அத்தகைய அவனுடைய அழகுடைத்தாகிய விளையாட்டினைக்கண்ட காவிரி அவனைத் தன்னுடையவனுக்கி ஒளித்தது" என்று புகலுகின்றது.

'அடுந்திறலத்தி ஆடணி நசைஇ'

(அகம் 396)

என்ற பகுதி இவ்வாடவன் ஆடிய ஒப்பற்ற நீராட்டத்தைக் கண்டுதான் காவிரி இவனை தன்னுளீர்த்தாள் என்கின்றது. என்வே இவ்வத்தி காவிரியில் நீர்விளையாடி தன்னுடைய திறமையினை மன்னனுக்கு முன்பாக மிகவும் அழகுற எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும் போதுதான் ஆற்று வேகத்திலடித்துச் செல்லப் பட்டான் இத்தகைய நீராட்டு விழா இன்றும் மேனுடுகளில நிகழ்வது ஒப்பிட்டு நோக்கத்தக்கது. எனவே இவன் 'சேர தாண்டவம்' என்ற ஆடலை ஆடுவதினுல் ஆட்டன் என்ற பெயர் பெற்றுனில்லை, நீராடுதலில் சிறந்தமையினுலேயே அப் பெயர் பெற்றுன் என்பதே ஏற்புடைய கருத்தாம். 'நீராடுதலில்

வல்லவன்' என்ற பொருளிலேயே இவ்வாட்டன் என்ற சொல் அத்திக்குப் பொருந்தி 'ஆட்டனத்தி' என்ற பெயர் அவனுக்கு வழங்கி வரலாயிற்று.

சேரநாட்டைச் சேர்ந்தவனல்ல

ஆட்டனத்தி சேர நாட்டைச் சார்ந்தவன் என்பதற்கு ஒரே சான்றாக விளங்குவது சிலம்பில் மதுரைக் காண்டத்து வஞ்சின மாலையில் காணப்படும்.

"உரைசான்ற மன்னன் கரிகால்வளவன் மகள்
வஞ்சிக்கோன்
தன்னைப் புனல் கொள்ளத் தான்புனலின்
பின்சென்று"

என்ற 10-15 வரிகளேயாம். வஞ்சி நகரின் அரசனாகிய அத்தியைக் காவிரியாறு அடித்துச் செல்ல கரிகாற்பெருவளத் தானின் புலமைநலம் சான்ற மகள் ஆதிமந்தி அவனைத்தேடி ஓடியதாக இவ்வரிகளுணர்த்துகின்றன.

இவ்வாட்டனத்தியைத் தவிர வேறொரு அத்தியும் அகநானூற்று 44 ஆவது பாடலில் காணப்படுகிறான் அவன் நன்னன் கங்கன், கட்டி, புன்றுறை, போன்ற சிற்றரசர்களோடு கூடி பெரும்பூட் சென்னி என்ற சோழ அரசனொடு கழுமலம் என்ற இடத்தில் எதிர்க்கவும், போரில் சோழன் வெற்றிபெற, எதிர்த்த அனைவரும் பட்டொழிந்தனர். 'கணையன்' என்பான் மட்டும் சிறைப்படுத்தப்பட்டான் எனச் செப்புகின்றதப் பாடல். இக்கழுமலம் என்னும் ஊரினை "சேர நாட்டிலுள்ளதோர் தலம்" என்றே இதுகாறும் வந்துள்ள குறிப்புகள் விளக்கு கின்றன. ஆனால்

"பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு
திருப்பெயர்த்தால்"
(திருஞானசம் 14)

என்ற பெரிய புராணத் தொடரை வைத்து நோக்குவோமே யாயின் இக்கழுமலம் 'என்ற ஊர் காவிரிப்பூம்பட்டினத்திற்கு மேற்கேயுள்ள இற்றை நாளைய சீர்காழிப் பதியினைக் குறிப் பதாகவே அமைகின்றது.

"கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்"
— திருமுறை 3

"கழுமலத்துறை பழுதில் சம்பந்தன்"
— திருமுறை 1

போன்ற தொடர்களும் இதற்கோர் சான்றுகக் காணப்படுகின்றன.

அகநானூற்று 6, 226 ஆவது பாடல்களில் மத்தி என்பவன் 'கழாஅர்' என்னும் காவிரித்துறைக்குத் தலைவன் என்பதனை

"மத்தி கழாஅர் முன்றுறை"

எனக் குறிக்கின்றன.

'பரதவர் கோமான் பல்வேலத்தி'
(அகம் 226)

என்ற தொடரால் இவன் பரதவ இனத்தைச் சார்ந்தவனும், பரதவர்களின் தலைவனும் குறிக்கப்பெறுகின்றான்.

இக்குறிப்புக்களுள் இரண்டு சங்க காலத்தைச் சார்ந்தன. மற்றொன்று சங்க காலத்தையடுத்தெழுந்த சிலம்பினைச் சார்ந்ததாம். சங்ககாலக் குறிப்புக்கள் இரண்டும் சோழநாட்டினைச் சார்ந்தவனாகவே அத்தியைக் குறிக்கின்றன. மேலும் ஆட்டனத்தியை சேரநாட்டினன் என்று குறிப்பதாக ஒரு குறிப்பும் அகநானூற்றில் இல்லை. சிலம்பு மட்டும் அவனை 'வஞ்சிக்கோன்' என்கின்றது. 'வஞ்சி' என்பது இங்கே சேரர் தலைநகரைக் குறிப்பதாக அமையுமா? அப்படியானல் அவன் சேரன் என்பது பற்றி அகம் அமைதியாக இருப்பதேன்? என்னும் வினுக்களுக்கு நாம் உறுதியாக இருக்கின்ற சேரர் வரலாற்றினை வைத்தே விடை கூறலாகும்.

சோழன் கரிகாற் பெருவளத்தான். சேரன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன். கடற் பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஆகிய மூவரும் குறிப்பிட்ட மேலளவில் எழுபது யாண்டுகட்குள் தம் தம் அரசாட்சியினைப் புரிந்து வந்தனர் என்பது வரலாறு தருஞ் செய்தி. இதில் இமய வரம்பனுக்கு சோழன் மகள் நற்சோணை என்பாள் மனைவியாக இருந்தாள் எனவே தாய்வழி முறையில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் சிலவாண்டுகள் சோணுட்டில் தங்கியிருந்திருக்கலாம். அவனைத் தவிர. அவனுடை மாற்றுந்தாய் வேளாவிக்கோன் பதுமன் தேவி ஈன்ற களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலோ ஆடு கோட்பாட்டுச் சேரலாதனே சோணுட்டிற்கு வந்ததாகவும், வேறு சேரவரச மரபினர் சோணுட்டிற்கு வந்ததாகவும் ஒரு குறிப்பும் கிடைத்திலது.

எனவே இவண் வஞ்சிக்கோன் என்பது 'அவ்வத்தி வஞ்சி மரங்களடர்ந்த பகுதிக்குத் தலைவனாக இருந்தான்' என்பதனைக் குறிப்பதாகவே கொள்ளலாகும். ஏனெனில் கழாஅர்த் துறை யானது வெண் மருத மரங்களோடு வஞ்சி மரங்களும் பல்கிய நிலையிற் காணப்பெற்றதென்பதனை

"கழாஅர் முன்துறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாயா"
(அகம் 226)

என்ற தொடர்கள் விளக்குகின்றன.

மேலும் இவன் சோணாட்டில், புகாரில் வாழ்ந்துவந்த காரணத்தால்தான், இயல்பான தமிழ்த் தலைவியர்களுக்குரிய முறையில் ஆதிமந்தி இவனோடு களவு—காதல் கொண்டிருக்கின்றாள்.

அத்தி — ஒரு வீரன்

ஆட்டன் அத்தி நீராடுதலில் மட்டும் வல்லமை பெற்றவன் அல்ல; பகைவர்களோடு பொருது வெற்றி பெறுகின்ற பெற்றியுமுடையவனுவனென்பதனை

'அடுந்திறலத்தி' (அகம் 396)

என்ற தொடர் செப்புகின்கிறது.

கழாஅர்த்துறையின் தலைவன் 'மத்தி' வலிய வேற்படையினை எடுத்து அடலொடு ஆற்றல் புரியத்தக்கவன் என்று அகநானூற்று ஆறுவது பாடல் பல்வேல் மத்தி என்று குறிக்கின்றது.

"வல்வில் எறுழ்த்தோள் பரதவர் கோமான்"
(அகம் 226)

என்ற பகுதி இவன் சிறந்த வில்லாளியாகவும், சிறந்த உடற்கட்டினை உடையவனாகவும் விளங்கினான் என்கின்றது.

எனவே தன்னுடைய நீராட்டுத் திறமையினாலே, குடிவழியினாலே இயல்பாகப் பரதவரின் தலைமை ஏற்றவனும், படைக் கலப்பயிற்சி உடையனாகி பகைவரொடு அட்டு வென்றி பெறத் தக்கவனுமாக விளங்கியவன் அத்திதான். இவன்றான் அகநானூறு முழுதும் பல்வேறு நிலையில் மத்தி எனவும். அத்தி எனவும், ஆட்டனத்தி எனவும் அழைக்கப் பெறுகின்றான்.

வள்ளல் — அத்தி

அத்தி சிறந்த வள்ளலாகவும் திகழ்ந்தான் என்பதனை ஐங்குறுநாற்று 61 ஆவது பாடல் 'கைவண் மத்தி' எனக் குறிப்பிடுகின்றது. இவனுடைய வள்ளண்மையினைப் போன்றே இவனுடைய நாட்டில்

"நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம் நெடுநீர்ப்
பொய்கைத் துடுமென விழூஉம்"

எனக் குறிக்கின்றது

ஆதிமந்தியும் — ஆட்டனத்தியும்

"உரைசால் மன்னன் கரிகால் வளவன் மகள்" என்று சிலப்பதிகாரத்தால் குறிக்கப்பட்ட ஆதிமந்தி சங்க இலக்கியங்களில் ஒரு புலவராகவும், அபலைப் பெண்ணாகவும் காட்டப் பெறுகின்றாளே யொழிய மன்னன மகளாகக் காட்டப்படவில்லை. இவ்வாதி மந்தி கரிகாலனின் மகள் என்பதற்கு உறுதியான சான்றேதும் இல்லை, எனவே மன்னன் தன்னாட்டு மக்களை எல்லாம் தந்தைபோற் புரத்தலின். ஒப்பற்ற நீராட்டு வீரனாகிய தன் காதலனை இழந்து துயருற்று அரற்றிய ஆதிமந்தியினையும் ஆட்டன் அத்தியின்மீது வைத்த பற்றுதலினால் மகள் போலப் புரந்திருத்தல் இயல்பு இந்நிகழ்ச்சியினை வைத்தே ஆதி மந்தியினை அரசன் மகளாகவே புலவருரைத்தார் போலும்!

அப்படியே அவள் மன்னன் மகளாகயிருந்தாலும் ஆட்டனத்திமீது காதல் கொண்டது தவறாகாது. ஏனெனில்

"பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒரு தனிக் குடிகள்"

— (சில. மங். 31)

என்ற முறையால் அரசர்களால் தங்களுக்குச் சமமாக கருதப் பட்ட குடியில் பிறந்தவன்தான் அத்தி.

"உரைசால் சிறப்பின் அரைசுவிழைழ திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்"

— (சில. மனையறம். 1—3)

அதாவது அரசர்களே கண்டு வெஃகும்படியான பெருஞ் செல்வர்களாக அப்பரதவர்கள் விளங்கினார்கள். அது மட்டுமல்ல கடல் வணிகம் முழுமையும் இவர்களாளுகையில் தானிருந்தது புறம். 30 ஆவது பாடல் இதற்கோர் சான்று எனவே இப்பரதவர்களின் தலைவனாகிய அத்தி நீராட்டு நிகழ்ச்சியில் கண்டோர் மனம் வாங்கும் திறமையாளனாக விளங்கியதுடன், பல்வேல் மத்தியாக. அருத்திறலனாகவும் விளங்கியமையான் ஆதி மந்தியையும் தம்பாலீர்த்தது வியப்பன்றல்லவா?

பேராசிரியர். கா. நமச்சிவாயர்

சிறுவை மோகனசுந்தரன்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் சிறந்த தமிழாசிரியர். இவர் தொண்டை நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் எனும் ஊரில் **1876-ஆம் ஆண்டு** பிப்ரவரி **20-ஆம் நாள்** வெள்ளிக்கிழமையன்று பிறந்தார் தந்தையார் இராமசாமி முதலியார் தாயார் அகிலாண்டவல்லி அம்மை.

இவர் தந்தை திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர். இவர் தன் தந்தையிடமே தொடக்கக் கல்வி கற்ருர். தம் பதினேழும் வயதில் சென்னைக்கு வந்து ஒரு தொடக்கப் பள்ளியிலே ஆசிரியராக அமர்ந்தார். அக்காலத்தில் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராய் விளங்கிய மயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளையிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் பயின்று, சிறந்த தமிழ்ப் புலவரானுர். மகாவித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களைத் தம் தந்தை போன்றே நினைந்து பக்தி செலுத்தி வழிபட்டார் அவர் விருப்பப்படி ஆசிரியரின் மனைவியைத் தம் தாய் போலவே கொண்டு அவர் தம் இறுதி நாள் வரை காத்து வந்தார்.

பேராசிரியர் நமச்சிவாயர் தாம் பாடம் பயிலுங்கால் சென்னைத் தொண்டையார்ப் பேட்டையிலிருந்து மயிலைக்குக் கடற்கரை ஓரமாகவே நடந்து செல்வதுண்டு. பலநாள் அங்ஙனம் நடந்து சென்றபோது ஒரு நாள் மயிலைக் கடற்கரையில் இளைப்பாறும்போது, "இந்தக் கடற்கரை ஓரத்திலே. அழகிய ஒரு குடிசையோ முடிந்தால் ஒரு மாளிகையோ கட்டி அதில் வாழ்ந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்" எனத் தம் நண்பருடன் பேசிக்கொண்டார்.

பேராசிரியர் நமச்சிவாயர் நற்றமிழ்ப் புலமை பெற்று பேராசிரியராய்த் திகழ்ந்தபோது சென்னை சாந்தோம் நெடுஞ் சாலையில் மைசூர் மன்னரின் மாளிகைக்குப் பக்கத்தில் இந்தத் தமிழ்ப் புலவரும் "கடலகம்" என்ற சிறந்த மாளிகையை அமைத்து அதில் வாழ்ந்து வந்தார். அந்நாளில் உயர்ந்த செல்வர்கள் கோடைக் காலத்தில் நீலகிரி எனும் மலைநாட்டுக்குச் செல்வதுண்டு. அந்த மலை நாட்டிலும். 'ஹோம் காட்டேஜ்', 'உட்பர்ன் ஹவுஸ்' எனும் கட்டங்களை வாங்கி

அதில் வசிக்கலானூர். தாம் மட்டும் ஆண்டுதோறும் மலைநாட்டுக்குச் செல்லாமல் ஆண்டுதோறும் பல தமிழ்ப் புலவர்களை உடன் கூட்டிச் செல்வார்.

இவர் முதலில் செயின்ட் சேவியர் உயர் பள்ளியிலும், பின்னர் நார்த்விக் மகளிர் பள்ளியிலும், சிங்களர் கல்லூரியிலும் சிறிது காலம் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் எஸ். பி. ஜி. உயர்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகள் தமிழ் ஆசிரியராய் இருந்தார்கள். 1914 முதல் மேரி ராணியார் கல்லூரியில் சிறிது காலமும் பின்னர்த் தாம் ஒய்வு பெறுமுன் சில ஆண்டுகள் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பணி புரிந்தார்கள். இவர் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தபோது படித்துவந்த சில மாணவர்கள் இன்று பெரும்புகழ் எய்தி விளங்குகின்றூர்கள். சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராய் இருந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு. இந்திய நிதி அமைச்சராய் விளங்கும் திரு. சி. சுப்பிரமணியம் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாய் விளங்கும் திரு. பி. எஸ். கைலாசம்; முன்னாள் மைய அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன், பேராசிரியர் ஜெகந்நாதாச்சாரியார் முதலியோர் அன்னூரின் மாணுக்கர் ஆவர்.

இவர் ஒரு நல்லாசிரியராய் இருந்ததோடு அல்லாமல் "நல்லாசிரியன்" எனும் திங்களிதழைப் பதினைந்து ஆண்டுகள் நடத்தப் பள்ளி ஆசிரியர்கள் அறிவுக்கு ஆக்க மூட்டினூர்கள். இவர் முதல் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையில் தமிழிற் பாட புத்தகங்கள் எழுதி மாணவர்களின் கல்விக்கு அரண் செய்தார். இவரைப்போல் அத்துறையில் மாணவர்கள் படிப் படியாக அறிவு பெறப் பாட நூல்கள் எழுதினவர் எவரும் இலர்.

பேராசிரியர் நமச்சிவாயர் பாட நூல்களே யன்றிக் கீசகன், பிருதிவி ராஜன், என்னும் தமிழ் நாடகங்களையும் எழுதினூர் மற்றும் "நாடக மஞ்சரி" எனும் 10 சிறு நாடகங்கள் கொண்ட நூல் மாணவர்களுக்கென எழுதி வெளியிட்டார். இவை பாட நூல்களாகவும், மாணவர்கள் அரங்கிலே நடிக்கவும் பயன் பட்டன. தேசிங்கு ராஜன், ஜனகன் எனும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். மற்றும் 'ஜனவிநோதனி' என்னும் திங்களிதழில் தொடர்ந்து பல கட்டுரைகள் வெளியிட்டார்கள்

இவர் தாமே "தமிழ்க் கடல் அச்சகம்' ஒன்றை நிறுவினூர். தாமே பல நூல்களை வெளியிட்டார். வாக்குண்டாம், நல்வழி ஆகிய

நூல்களுக்கு உரை எழுதிப் பதிப்பித்தார் தொல்காப்பியர் - பொருளதிகாரம் - இளம்பூரணம், தணிகை புராணம், தஞ்சைவாணன் கோவை, இறையனார் களவியல், கல்லாடம் முதலிய நூல்களைச் சிறந்த முறையில் பதிப்பித்துப் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். 'குணவான் தன் குற்றம் உணர்வான்'', ''தணிகைத் தவப்பயன்மாலை'' முதலிய கவிதை நூல்கள் இயற்றிச் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். மேலும் ''கயவன் தன் கல்வி அருமை அறிந்தது'' என்ற புதுமைக் கவிதையைக் குழந்தைகளுக்காகப் பாடியவர் இன்றைய குழந்தைக் கவிஞர்களுக்கு ஒரு முன்னோடியாய் விளங்கினார். இவருடைய குழந்தைப் பாடல்களை அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தனர் அக்காலத்தில். இன்றும் அவை இனிக்கின்றன ஒரு பாடலைச் சுவைப்போம்

அ, ஆ, இ, ஈ முதலிய எழுத்துக்களைக் கற்றுத் தருவது போல:

அ இதுவோர் அத்திப்பழம்
ஆ என்பவன் ஆசைப்பட்டான்
இ என்பவன் இதோ என்றான்
ஈ என்பவன் ஈ என்றான்
உ என்பவன் உரி என்றான்
ஊ என்பவன் ஊதென்றான்
எ என்பவன் எனக்கென்றான்
ஏ என்பவன் ஏதென்றான்
ஐ என்பவன் ஐயாயென்றான்
ஒ என்பவன் ஒன்றென்றான்
ஓ என்பவன் ஓடிவிட்டான்
ஔ என்பவன் கௌவிக்கொண்டான்

பேராசிரியர் அவர்களின் புலமை நலம் அறிந்த சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 1917 ஆம் ஆண்டு தமிழ்த் தேர்வுக் குழுவின் தலைமைத் தேர்வாளராய் இருக்கச் செய்தனர் 1920 முதல் 1934 வரை அரசினர் தமிழ்க் கல்விக் குழுவின் தலைவராய் இருந்தார். இவர்களது அரிய முயற்சியின் பயனாகத் ''தமிழ் வித்துவான்'' தேர்வு நிலை உண்டாயிற்று. அன்று இட்ட இந்த வித்தின் பயனாகத்தான்

இன்று பலர் புலவர் பட்டம் பெற்ற பெருமக்களாய் விளங்கு கின்றார்கள் இவர்கள் வகித்த பதவிகளில் அறநெறிக்கும் தமிழ் நெறிக்கும் மாறாக நடக்க மாட்டார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் பண்புடையவர். இவர்களது தமிழ் ஆர்வத்திற்கும் தமிழ்ப் பணிகளுக்கும் பனகல் அரசரும், சர் பி. டி. இராசன் அவர்களும், டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களும் துணை நின்றார்கள்.

பேராசிரியர் நல்ல ஆளுமைச் சக்தியும் பொலிவுடைய அழகிய உருவமும் அமைந்தவர். பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு செயலாளராகவும், துணைச் செயலாளராகவும் விளங்கினார்கள். இவரது விருந்தோம்பலில் பங்கேற்று, கணவர் சொல் தட்டாது. இன்முகம் காட்டி, விருந்து பேணி மனையை மாண்புடையதாக்கிய பெருமை இவரது வீட்டரசியார் சுந்தரம்மாளைச் சாரும் இவ்வம்மையார் சான்றாண்மை மிக்கவர்.

பேராசிரியர் அவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், ஆசிரியர் மறைமலையடிகள், திரு வி. க போன்றவர்களிடத்தில் பக்தியும் பாசமும் உடையவர்கள்.

தமிழ் மொழிக்கு எனத் தைத் திங்களின்போது பொங்கல் விழாவினைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடக் கற்றுத் தந்தவர். "திருவள்ளுவருக்கும்" திருநாள் எடுத்து உலக நாடுகள் அனைத்திற்கும் அழைப்புகள் அனுப்பி மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இன்று வழங்கும் திருவள்ளுவர் ஆண்டு கணக்கு முறை பேராசிரியர் கொண்டாடிய திருவள்ளுவர் திருநாளில் முடிவு செய்த ஆராய்ச்சியின் குறிப்பே யாகும் இவரது ஆக்கப் பணிகளுக்கு அக்கால அமைச்சரவைகள் உதவியாக இருந்தன.

இத்தகைய பெரியார் — ஒரு தமிழ்ப் புலவராக இருந்து — தாம் ஈட்டிய பொருள் அனைத்தும் தமிழ்ப் புலவர்களுக்கு ஈந்து புரவலராகவும் காட்சியளித்தார். ஒரு முறை தன்வசம் பல நாள் கடந்துவிட்ட புரோநோட் பத்திரங்களை (கடன் பத்திரங்களை)

சேர்த்துப் பார்த்தார் ரூ. 35,000-க்கு மேற்பட்டு இருந்தன. அவைகள் அனைத்தும் புலவர்களுக்கே அளித்தன. ஒரு நாள் மாலை அவற்றை எல்லாம் கிழித்துப் போடச் செய்தார்.

பேராசிரியராய் புலவராய், இதழாசிரியராய், நூலாசிரியராய், உரையாசிரியராய், நாடக ஆசிரியராய், குழந்தைக் கவிஞராய், சிறந்த பதிப்பாசிரியராய், புலவர்களுக்குப் புரவலராய்க் காட்சி தந்தவர். நற்குணச் செல்வர், தீமையே நினையாதவர் பலரைக் கைதூக்கிவிட்ட பேராளர். இத்தகு சிறந்த நல்லாரது நூற்றாண்டு விழா இவ்வாண்டு. இத்தகு சான்றோர் 13—3—'36-ல் மறைந்தபோது தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் தம் இரங்கல் உரையில் கூறியவற்றை நினைத்தல் நலம் :

" ....

உள்ளும் புறமும் ஒத்த நண்ப
நின்மொழியுன்ன நின் செயல் எண்ண
உள்ளங் குழையும்; ஊனுங் கரையும்
என்பு நெக்குருகும் அன்புக் கடலே
பெரிதே துன்பம் பெரிதே!"

புரட்சிக் கவிஞர் வரலாறு

டாக்டர். சாலை. இளந்திரையன்.

அய்யா,

தமிழ்ப் பொழில் 1976 தை (சனவரி — பிப்பிரவரி) மலரில் முனைவர் இளவரசு அவர்கள் எழுதிய "பாவேந்தரின் வரலாறு பற்றி" என்னும் குறிப்பைப் படித்தேன்; அறிஞர் பெருமக்களிடையிலாயினும், இக்கவிஞர் பெரு மகனைப் பற்றிய ஆர்வர் வற்றாமல் இருந்து வருவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியும் அடைந்தேன்.

'தமிழர்களாகிய நமக்கு வரலாற்று ஓர்மையே கிடையாது' என்பதை நாம் இன்று வரை மெய்ப்பித்துக்கொண்டு இருக்கிறோம்: புரட்சிக் கவிஞரின் பாடற்பணியால் மிகுபயன் பெற்ற அரசியல் கட்சிக்காரர்களும். — தாங்கள் ஆட்சியில் இருந்த ஒன்பது ஆண்டு காலத்தில், ஏதேதோ வெளிப்பகட்டான நினைவு அடையாளங்களைப் புனைந்தார்களே யன்றி. — தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே ஒரு புதிய கர்ச்சனையைப் புரிந்த இந்தக் கவிஞரேற்றின் வரலாற்றைச் செம்மையாக வரைந்து வைக்க முனைந்தார்களில்லை புதுவை அரசும், சில நினைவுப் பணிகளைச் செய்துதான் வருகிறது; என்றாலும், புதுவை மண்ணுக்கே பெரும் பொலிவு தந்த இந்தக் கவிஞருக்கு அவர்கள் செய்வது போதாது என்றே சொல்ல வேண்டும்.

மாற்றுக் கருத்துக்களைத் தாங்கிக் கொள்ளும் திறனற்ற மிக மெல்லிய உள்ளமும் அதனால் விளைகிற வஞ்சகப் போக்கும் உடைய தமிழ் அறிஞர் உலகம், தமிழகத்துக்கு அப்பால் இவரைக் கவிஞர் என்று அறிமுகம் செய்யத் தவறிவிட்டது. அவர் வாழ்ந்த காலம் வரை அவரை ஒதுக்கி வைத்தார்கள், அவர் இறந்த பிறகு "பிசிராந்தையார்" என்னும் நாடகத்துக்கு இந்திய அரசின் (சாகித்திய அகாடெமிப்) பரிசு வழங்கினார்கள் இதன் மூலம், பாவேந்தர் ஒரு சிறந்த கவிஞர் என்னும் பெரிய உண்மையே. தமிழகத்துக்கு அப்பாலுள்ள இந்திய மக்களிடமிருந்து மறைக்கப்பட்டு விட்டது!

இந்த நெடுந்தீங்குகளால், ஒரு பெருங் கவிஞனின் தெளிவான வரலாறே இன்றைய இளந்தலை முறைக்கும் நமது எதிர்கால மக்களுக்கும் தெரியாத செய்தியாகி விட்டது. இந்தப் பெரிய தவறு உடனடியாகத் திருத்தப்படுதல் வேண்டும்.

தமிழகத்தில் பெருநிலை எய்தியுள்ள தமிழறிஞர்கள் இப்போதாவது. — தமிழக அரசில் அல்லது புதுவை அரசில் அல்லது இந்திய அரசில் தங்களுக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி பாரதிதாசன் வரலாற்றை ஆராய்ந்து எழுதவும். அவருடைய நூல்களை, — அவை எழுதப்பட்ட கால வரிசைப்படி அடைவுபடுத்தி வெளியிடவும் ஒரு குழுவை நியமிக்கச் செய்தல் வேண்டும். கட்சிச் சார்புகள் இல்லாத என் போன்றவர்கள் சொன்னாலே அரசியல்வாதிகள் அதை ஒரு காதில்

கேட்டு மறுகாது வழியாக விட்டு விடுகிறார்கள்: கடந்த சில ஆண்டுகளில் இது தொடர்பாக, நான் பல அரசியல் ஆட்களை அணுகிப் பார்த்ததுண்டு; எல்லோரும் கேட்டுத் தலையை ஆட்டுகிறார்களே தவிர இத்தகைய நற்பணிகளுக்கான ஏற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுவதே இல்லை. அதனாலேதான், அவர்களோடு நெருங்கித் தொடர்புபட்டு இருப்பவர்களாவது தமிழுக்காக இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நானே இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு நான் எண்ணியதுண்டு; திரு. ஏ. பி சனார்த்தனம், திரு அன்புப்பழம்நீ (பழனியாண்டி) முதலிய நண்பர்கள் ஊக்கமூட்டி, இயன்ற அளவு துணை செய்வதாகவும் சொன்னார்கள் ஆயினும் தமிழகத்துக்கு வெளியே வாழ்கிற என்னால் இந்த முழுநேரப் பணியைச் செய்ய இயலாது; ஏன், தனிப்பட்ட யாருமே, தங்கள் பணத்தைச் செலவு செய்துகொண்டு இதுபோன்றதொரு பெரும் பணியில் ஈடுபட இயலாது

பாரதிதாசனாரிடம் பேரீடுபாடு கொண்டவர்களே இந்தப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதில்லை தமிழ்ப் பயிற்சியும் ஆராய்ச்சி ஆர்வமும் கவிஞரிடம் ஓரளவு ஈடுபாடும் கொண்ட சில இளைஞர்களையே இந்தப் பணியில் ஈடுபடுத்தினால் போதுமானது தமிழ் ஆர்வம் கொண்ட தமிழகத்துப் பெருமக்கள் இந்த நற்பணி வடிவம் கொள்ளுதற்கு ஏற்ற வழிவகைகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்று மிக விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்

சாலை — சாலினி
தமிழகச் சுற்றுப்பயணம்
ஒரு சிறப்பு அறிவிப்பு

தில்லிப் பல்கலை கழகத் தமிழ்ப் பேராசிரியரும் "அறிவியக்கம்" இதழின் சிறப்பாசிரியருமான டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் தில்லித் திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை டாக்டர் திருமதி சாலினி அவர்களும், — 1—6—76 முதல் 15—7—76 வரை தமிழகச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுகிறார்கள்.

சாலைத் தம்பதியரைக் கொண்டு இலக்கியப் பொழிவுகள், கலந்துரையாடல்கள் அறிவியப் பொழிவுகள் முதலியன ஏற்பாடு செய்ய விரும்புவோர், உடனேயே கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

Dr Saalai Ilanthiraian,
9-A/7. W. E A. Karol Bagh,
New Delhi-5.